# Lifeline

# லைஃப்லைன் (Lifeline) வழங்கும் சேவைகள் நீங்கள் மன அமைதியுடனும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கு உதவுகின்றன

லைஃப்லைன், கனடாவின் முதல் தர மருத்துவ விழிப்பூட்டல் சேவை, வருடத்தின் 365 நாட்களும், ஒரு நாளைக்கு 24 மணிநேரமும், உங்களுக்கு விரைவான, எளிதான அணுகலை வழங்குகிறது. இதனால் நீங்கள் வீட்டில் இருக்கும்போதும் நிம்மதியாக இருக்கலாம். அத்துடன் நம்பிக்கையுடன் வெளியில் செல்வதற்கான சுதந்திரத்தையும் பெறலாம்.

**லைஃப்லைனின் சேவைகள் பின்வரும் மக்களுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது:**

- தடுமாறி விழும் அபாயத்தில் உள்ளவர்கள்
- நாள்பட்ட நோய்களுடன் வாழ்பவர்கள்
- நடந்துசெல்வதில் சிக்கல்களை எதிர்கொள்பவர்கள்
- மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்து, அதன் பிறகு, வீட்டில் குணமடைந்து வருபவர்கள்
- தொடர்ந்து சுதந்திரமாக வாழ விரும்புபவர்கள்

## லைஃப்லைன் உங்களுக்கு மேலும் பல சேவைகளையும் வழங்குகிறது

- கனடிய நேரத்தில் முழுநேர கண்காணிப்பு
- எங்களின் அன்பான, அக்கறையுள்ள பதிலளிப்பு மையத்தின் பணியாளர்களுக்கு 240 மணிநேர சிறப்புப் பயிற்சியை லைஃப்லைன் வழங்குகிறது.
- லைஃப்லைன் மருத்துவ அழைப்புகளை மட்டுமே கண்காணிக்கிறது
- எங்களால் 240க்கும் மேற்பட்ட மொழிகளில் உங்களுக்குப் பதிலளிக்க முடியும்
- எந்தவிதமான உபகரணங்களும் வாங்கத் தேவையில்லை
- லேண்ட்லைன் தொலைபேசி இணைப்புத் தேவையில்லை



## லைஃப்லைன் எவ்வாறு செயல்படுகிறது?



### 1. உதவியாளரை வரவழைப்பதற்காக அழையுங்கள்

உங்களுக்கான லைஃப்லைன் உதவி பட்டனை அழுத்தி உங்களுக்குத் தேவைப்படும்போது உதவியைப் பெறலாம். உங்களால் பட்டனை அழுத்த முடியாத பட்சத்தில், எங்களின் மேம்பட்ட சேவைகள் மூலம், கீழே விழுவதைக் கண்டறியும் அல்லது இருப்பிடத்தைக் கண்டறியும் தொழில்நுட்பத்தைச் சேர்ப்பதற்கான விருப்பத்தேர்வும் உள்ளது.



### 2. உறுதியளிக்கும் ஒரு குரலைக் கேளுங்கள்

அக்கறையுள்ள லைஃப்லைன் பதிலளிப்பு பணியாளர் உங்கள் சுயவிவரத்தை விரைவாக அணுகி அவசர நிலைமையை மதிப்பிடுவார்.



### 3. உங்களுக்குத் தேவையான உதவி வந்துகொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள்

உங்கள் விருப்பத்தேர்வுகளின் அடிப்படையில், லைஃப்லைன் உங்கள் பக்கத்து வீட்டுக்காரரையோ உங்கள் அன்புக்குரியவரையோ அல்லது அவசரகாலச் சேவைகளையோ தொடர்புகொள்ளும். அதன் பிறகு, உங்களுக்கு உதவி கிடைத்துள்ளதை உறுதிசெய்வதற்காக, நிலைமையைத் தொடர்ந்து கண்காணிக்கும்.

**www.victorialifeline.ca**

# உங்களுக்குப் பொருத்தமான தீர்வு லைஃப்லைனில் உள்ளது

## லைஃப்லைன் (Lifeline) வழங்கும் சேவைகள் நீங்கள் மன அமைதியுடனும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கு உதவுகின்றன

### வீட்டில் இருக்கும் போது

உங்கள் வீட்டில் மற்றும் வீட்டிற்கு அருகில் நீங்கள் இருக்கும்போது விழிப்பூட்டல் பட்டனை அழுத்துவதன் மூலம் உதவியைப் பெறலாம்.

**இதைப் பெற பொருத்தமானவர்கள்:** வீட்டிலேயே அதிக நேரத்தைச் செலவிடுபவர்கள் மற்றும் பகலோ இரவோ எந்த நேரத்திலும் அவசர உதவியைப் பெற விரும்புபவர்கள்.

**உங்களால் பொத்தானை அழுத்த முடியாவிட்டாலும், விருப்பத்தேர்வில் உள்ள கீழே விழுவதைக் கண்டறியும் அம்சமானது கீழே விழுவதைக் கண்டறிந்தால் தானாகவே உதவிக்கு அழைக்கும்.**[1]

### பயணத்தின் போது

இது எடுத்துச்செல்லக்கூடிய மருத்துவ விழிப்பூட்டல் தயாரிப்பாகும். நீங்கள் விரும்பும் இடத்திற்கு நிம்மதியாகச் சென்றுவருவதற்கான சுதந்திரத்தை இது வழங்குகிறது.[2]

**இதைப் பெற பொருத்தமானவர்கள்:** வீட்டில் இருக்கும்போதோ பயணத்தின்போதோ நம்பிக்கையுடனும் மன அமைதியுடனும் சுறுசுறுப்பாகவும் சுதந்திரமாகவும் இருக்க விரும்புபவர்களுக்கு இது பொருத்தமான சேவையாகும்.

### மெட்ரெடி மெடிகேஷன் டிஸ்பென்ஸர் (MedReady Medication Dispenser)

இது 24/7 கண்காணிப்புடன் பல்வேறு விதமான மருந்துகளை நிர்வகிப்பதற்கான ஓர் எளிய, குறைந்த செலவுள்ள, தானியங்கு வழியாகும்.

**இதைப் பெற பொருத்தமானவர்கள்:** சிக்கலான மருந்துகளை உட்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளவர்களுக்கும் பல்வேறு வகையான மருந்துகளை எடுத்துக்கொள்பவர்களுக்கும் தங்கள் மருந்துகளை எடுக்க மறப்பவர்களுக்கும் இது பொருத்தமானது.

---

1 பயனர்கள் தடுமாறி கீழே விழும் ஒவ்வொரு முறையும் உபகரணங்களால் கண்டறிய முடியாது. பயனர்களுக்கு உதவி தேவைப்படும்போது, முடிந்தவரை அனைத்து நேரங்களிலும் தங்களின் விழிப்பூட்டல் பட்டனை அவர்கள் அழுத்த வேண்டும்.

2 நீங்கள் வெளியில் இருக்கும்போது சேவைகளுக்கான கவரேஜும், வீட்டில் இருக்கும்போது வயர்லெஸ் சேவைக்கான அணுகல்/கவரேஜும் அந்தப் பகுதியில் உள்ள மூன்றாம் தரப்பு வயர்லெஸ் நெட்வொர்க்குகள் மூலம் வழங்கப்படுகிறது. உங்கள் பகுதியில் உள்ள மூன்றாம் தரப்பு செல்லுலார் வழங்குநரின் கவரேஜைப் பொறுத்து லைஃப்லைன் சேவைகளுக்குச் சில வரம்புகளும் உள்ளன. இவற்றின் சமிக்ஞை வரம்புகள் ஒவ்வொரு பகுதிக்கும் மாறுபடக்கூடும்.

VICTORIA LIFELINE
Safe and independent living.

## கூடுதல் தகவல்களைப் பெற, எங்களைத் தொலைபேசியில் அவஹய

**204-956-6777**
**1-888-722-5222**

**www.victorialifeline.ca**